# சங்க இலக்கிய மொட்டுகள்

**ப.சரவணன்**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்
கணேசர் கலை அறிவியல் கல்லூரி
மேலைச்சிவபுரி

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** II

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

பூவுலகில் தோன்றிய ஒவ்வொரு உயிரும் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, மடிவது இயற்கையின் நிகழ்வாகும். இயற்கையில் தோன்றிய உயிர்களுள் தாவரங்களே முதன்மை இடம் பெறுகின்றன. தாவர வகைகளுள் மரத்திற்கு உறுப்பாக வரும் பெயர்களில் பூவின் பெயராக வரும் சில பெயர்களைத் தொல்காப்பியர் குறிப்பிடுவார். அவைதாம்,

**“இலையே முறியே தளிரே தோடே**
**சினையே குழையே பூவே அரும்பே**
**நனையே உள்ளுறுத் தனையவை யெல்லாம்**
**மரனொடு வரூஉங் கிளவி என்ப” (தொல்.மர.89)**

மலரின் வளர் பருவங்களை நனை, அரும்பு, முகை, போது, மலர், அலர், வீ என ஏழாகப் பகுத்துக் கூறுவது பாட்டியல் நூல்களின் மரபாகும்.

சங்க இலக்கியங்கள் இயற்கையின் எழிலை அழகாகக் கூறும் பாங்குடையது. அவற்றுள் முதற்பொருளும், கருப்பொருளும் பொருந்த இலக்கணம் வகுத்தவர் தொல்காப்பியர். கருப்பொருள்களில் முதன்மையிடம் தாவரங்களுக்கு உண்டு. அத்தாவரங்களில் தோன்றும் பூக்களுக்கு சிறப்பிடம் தந்து பாடல்கள் இயற்றினர் புலவர் பெருமக்கள். அப்பூக்களில் மலராத மொட்டுக்கள் முக்கிய இடம் பெறுகின்றன. மலர்களில் மொட்டுக்களே அழகோவியமாகத் தோன்றுகின்றன. அம்மொட்டுக்களை,

**“முகை நனை கலிகை முகிழ் சினை கோரகம்**
**நகையொடு கன்னிகை போகில் மொட்டே” (சே.தி.மர.9)**

என சேந்தன் திவாகரமும்,

**“முகை நனை கலிகை போகின் முகுளமே மொக்குண் மொட்டு**
**மகிழ்வுறு கோரகங்கண் மற்றைச் சாலகமரும்பாம்” (சூ.நி.மர.48:1-2)**

எனச் சூடாமணி நிகண்டும்,

**கலுவட நனை முகை கன்னிகை யரும்பே**
**முகிளங் கலிகை சாலகங் கோரகம்**
**போகினகை மலரு மொக்குண் மொட்டென்ப (பி.நி.மர.158)**

எனப் பிங்கல நிகண்டும் கூறுகின்றன.

தாவரத்துள் மலர்களே முன்னுரிமை உடையன. மலர்களுள் மொட்டுகளே சிறப்பிடம் பெறுகின்றன. மொட்டுக்களில் நனையே முன்

தோன்றி நனைப்புடைய தேனைத் தோற்றுவிக்கும்.[1] நனை என்பது தோற்றம் என்ற பொருளைத் தோற்றுவிப்பதால் நனை மொட்டுக்களில் முதலிடம் பெறுகின்றது.

**1. நனை**

1. **'நனை'** என்பது **மொட்டின்** பெயராக வரும் என செந்தன் திவாகரமும், பிங்கல நிகண்டும் கூறுகின்றன.[2] நனை என்பது **அரும்பின்** பெயராக வரும் என சூடாமணி நிகண்டு கூறுகின்றது.[3] **நனை** மலரின் பிறப்புப் பருவம் என்பார் கோவை இளஞ்சேரன்.[4]
2. நீருக்குக் கீழே இருக்கும் குவளையின் அரும்புகளை **"நீர்நனை" (ம.காஞ்சி:587-588)** என்று கூறினர்.
3. குராவின் பசிய அரும்புகளைப் **"பசுநனை" (குறு.341:1)** என்றனர்.
4. அரும்பிய செருந்தியின் போதுகளை **"நனைத்த செருந்தி" (அகம்.150:9)** என்றும், அரும்புகள் அலர்ந்த செருந்தியை **"நனை ஊழ்த்த செருந்தி" (கலி.26:2)** என்றும் கூறினர்.
5. முருக்கின் செறிந்த அரும்புகளை **"சிதர்நனை" (சிறுபாண்:254)** என்றும், பெரிய அரும்புகளைக் **"கருநனை"(அகம்.41:2)** என்றும் கூறினர்.
6. அவரையின் பசுத்த அரும்புகளை **"பைந்நனை" (சிறுபாண்:164)** என்றனர்.
7. அரும்பு முதிர்ந்த புன்க மரத்தினை **"நனைமுதிர் புன்கு" (குறு.53:2)** என்றனர்.
8. அரும்பு மலர்ந்த வேங்கையை **"நனை வேங்கை" (பரி.15:32)** என்றும், தேனால் உள்ளிடம் நனைந்த வேங்கையை **"அகடுநனை (வேங்கை" புறம்.390:21)** என்றும் கூறினர்.
9. அரும்பிய ஞாழலை **"நனை ஞாழல்" (பொரு:197)** என்றும், அரும்புகள் முதிர்ந்த ஞாழலை **"நனைமுதிர் ஞாழல்" (குறு.397:1)** என்றும், அதன் பசிய அரும்புகளை **"பசுநனை" (குறு.81:2)** என்றும் கூறினர்.
10. நீரால் நனைந்த ஈங்கையின் அழகிய தளிர் **"நீர்நனை அந்தளிர்" (அகம்.294:7)** எனப்பட்டது.
11. காயா மலரின் கரிய அரும்பினைவ **கருநனை" (சிறுபாண்:165)** என்றனர்.
12. தளவின் சிவந்த அரும்பினை **"செந்நனை" (அகம்.23:3)** என்றனர்.
13. கொத்தான அதிரல் பூவினை **"நனை அதிரல்" (அகம்.99:5-6)** என்றனர்.

**2. அரும்பு**

1. **'அரும்பு'** என்பது **மொட்டின்** பெயராக வரும் என பிங்கல நிகண்டு கூறுகின்றது.[5] அரும் பூவாக வளர்வதற்கு அடிப்படையாவதால் இப்பருவம் அரும்பு எனப்பட்டது.[6]
2. அரும்புவிட்ட புன்னை **"அரும்பிய புன்னை" (அகம்.30:13)** என்றும், அது மெலிதாக இருப்பதால் **"மெல்லரும்பு" (அகம்.10:2-3)** என்றும், அதன் விரியும் வாயினை **"அரும்புவாய்" (நற்.278:1-2)** என்றும், புன்னை அரும்புகள் நிறைந்த காட்டினை **"அரும்புமலி கானல்" (ஐங்.132:1-2)** என்றும் கூறினர்.
3. பாம்பின் பல்லினைப் போன்ற குரவின் அரும்புகளை **"அரவெயிற்று அன்ன அரும்பு" (அகம்.237:3)** என்றனர்.
4. அரும்பு மலர்ந்த செருந்தியை **"அரும்பலர் செருந்தி" (புறம்.390:3)** என்று கூறினர்.
5. முருக்கின் அழகிய அரும்புகள் **"பாசரும்பு" (அகம்.229:16)** எனப்பட்டது.
6. வேங்கை மரத்தில் இனி பூத்தற்கு அரும்பு ஒன்றுமில்லை என எண்ணுமாறு முற்றவும் மலர்ந்ததை **"அரும்பற மலர்" (குறு.26:1 புறம்.202:18)** என்றும், வேங்கை அரும்பின் நுனியை **"அரும்புவாய்" (நற்.257:5)** என்றும், மணியை ஒத்த அதன் அரும்பினை **"மணியேர் அரும்பு" (அகம்.232:8)** என்றும், அரும்பு முதிர்ந்த வேங்கையை **"அரும்பு முதிர் வேங்கை" (அகம்.105:1 அகம்.242:1)** என்றும் கூறினர்.
7. குழை தழைந்த இளைய ஞாழலை **"குழை அரும்பிய குமரி ஞாழல்" (நற்.54:9)** என்றும், அரும்பு முதிர்ந்து மலரும் பூங்கொத்தை **"அரும்பு முதிர் அவிழ் இணர்" (ஐங்.146:1)** என்றும் கூறினர்.
8. அரும்புகள் முதிர்ந்த ஈங்கையை "அரும்பு முதிர் ஈங்கை" (அகம்.125:3) என்றனர்.
9. பூப்பதற்கு இனி அரும்பே இல்லாமல் மலர்ந்த வெண்கடம்ப மலரை **"அரும்பற மலர்ந்த ஆய்பூ" (அகம்.257:6)** என்று கூறினர்.

மழையைப் பெறுகின்ற குளிர்ந்த நிலத்திலே நின்ற கார்காலத்திற்கு முற்பட்ட மழைக்கு அரும்பு ஈனாமல் நின்று, பின்பு உலர்ந்த முதலிடத்தே தழைத்த முள்ளைப் புறத்தே உடைய பிடவம் பூவினை,

**"தளிபெறு தண்புலத்துத் தலைப் பெயற்கு அரும்பு ஈன்று**
**முளிமுதல் பொதுளிய முட்புறப் பிடவமும்"** **(கலி.101:1-2)**

எனப்பட்டது.

விரிந்து நறிதாகிய முல்லைப் பூவினை "அரும்பு அவிழ் நறுமுல்லை" (கலி.66:6) என்று கூறினர். பசிய அதிரல் கொடியின் அரும்புகளை காட்டு யானைகள் கவளமாக உண்ணும் என்பதை,

**"………… ………… பைங்கொடி அதிரல்**
**பெரும்புலர் வைகறை அரும்பொடு வாங்கிக்**
**கான யானை கவளங் கொள்ளும்" "** **(அகம்.157:6-8)**

என்பதை அகநானூறு கூறுகின்றது.

குவளைப் பூவினை **"குவளை அரும்பு" (அகம்.180:5)** என்று கூறினர். செம்முல்லைக் கொடியின் அரும்பானது நிலவின் வெண்மை நிறத்தை உடையதால் "நிலவின் அன்ன நேரரும்பு" (ஐங்.454:1-2) என்றும் கூறினர்.

**3. முகை**

1. **'முகை'** என்பது மொட்டின் பெயராக வரும் என சேந்தன் திவாகரமும், பிங்கல நிகண்டும் கூறுகின்றன.[7]
2. **'முகை'** என்பது அரும்பின் பெயராக வரும் என சூடாமணி நிகண்டும்[8], முகை என்பது சிற்றரும்பின் பெயராக வரும் என பிங்கல நிகண்டும்[9] கூறுகின்றன. அரும்பின் அடிப்பக்கம் பருத்து முகைத்துத் தோன்றுவதால் முகை எனப்பட்டது.[10]
3. வாழையின் வளைந்த மடலில் இருந்து வரும் கூரிய நுனியை **"குவிமுகை" (நற்.188:1-2)** என்றும், கூர்மை பொருந்திய கொழுத்த முகையினை, **"கொழுமுகை" (நற்.225:3)** எனவும் கூறினர்.
4. காந்தள் மொட்டினை **"காந்தள் முகை" (கலி.43:9-10 புறம்.144:8-9)** என்றும், அதன் கொழுவிய அரும்பினை **"கொழுமுகை" (நற்.294:7 குறு.265:1)** என்றும், விரிந்த அரும்பினை **"முகையவிழ்" (குறு.259:2-3)** என்றும், நெரிப்புடைய அரும்பினை **"நெரிமுகை" (பரி.14:13)** என்றும், அழகிய அரும்பினை **"கவின் முகை" (பரி.18:36)** என்றும், உயர்ந்த முகையினை **"உயர் முகை"(கலி.53:5)** என்றும், மெல்லிய பிணிக்கப்பெற்ற அரும்புகளை **"மென்பிணிமுகை" (அகம்.238:16-17)** என்றும், புதிதாகத் தோன்றிய முகையினைப் **"புது முகை" (மலை:145-146)** என்றும், வெள்ளிய அரும்புகளை **"வான் முகை" (அகம்.357:2)** எனவும் வகைப்படுத்தினர்.
5. கோடற் பூவின் குவிந்த முகைகளைக் **"குவி முகை"(முல்லை:95)** என்றனர். அரும்பு முதிர்ந்த தாழையின் வெளிய பூவினை **"முகை முதிர் வான்பூ" (நற்.203:3-4)** என்றும், அதன் கூம்பிய அரும்பினை **"கூம்பு முகை" (நற்.335:4-5)** என்றும், கொழுவிய அரும்புகளை **"கொழு முகை" (குறு.228:1)** எனவும் கூறினர்.
6. அறுகின் நறிய அரும்பு **"நறு முகை" (அகம்.136:13-14)** எனப்பட்டது.
7. கரும்பின் வெளிய முகை **"வெண் முகை" (நற்.366:7-8)** எனப்பட்டது.
8. காட்டு மல்லிகையின் கூரிய பற்களை ஒத்த மெல்லிய வரிகளை உடைய அரும்புகளை **"வரி மென்முகை"(அகம்.391:1-2)** என்றும், அதன் நல்ல அரும்புகளை **"நன்முகை" (அகம்.223:14)** என்றும், குயிலினது வாயலகு போன்ற கூரிய மொட்டுக்களை **"கூர்முகை" (புறம்.269:1)** என்றும் கூறினர்.
9. அவரையின் வளவிய அரும்புகளை **"கொழுமுகை" (அகம்.217:9)** என்று கூறினர்.
10. ஆம்பலின் கொக்கு போலக் கூம்பிய முகையை **"கூம்புமுகை" (அகம்.230:2)** என்று கூறினர்.

11. அரும்பில்லாத இலவம் பூக்களை **"முகையில் இலவம்" (அகம்.11:3)** என்றனர்.
12. இண்டையின் வெள்ளிய அரும்புகளை **"வான்முகை" (அகம்.357:2)** என்றார்.
13. கோங்கின் அரும்பினை **"முகை" (கலி.56:23 அகம்.240:11 புறம்.336:10)** என்றும், அதன் அலர்ந்த முகைகளை **"முகைபிணி" (அகம்.99:5)** என்றும், குவிந்த முகைகளைக் **"குவிமுகை" (நற்.86:7)** என்றும், மெல்லிய அரும்புகளை **"மென்முகை" (குறு.254:2)** என்றும், அழகுமிகு மொட்டுக்களை **"கொழுமுகை" (ஐங்.343:3)** என்றும், முதிராத இளைய முகையை **"இளமுகை" (கலி.117:5)** என்றும், விளங்குகின்ற முகையை **"அவிர்முகை" (சிறுபாண்:25)** என்றும் கூறினர்.
14. தளவின் சிவந்த மொட்டினை **"செம்முகை" (ஐங்.447:2)** என்றார். அரும்பிய தாமரையை **"முகைந்த தாமரை" (ஐங்.6:4)** என்றும், அதன் வெள்ளிய அரும்பினை **"வான்முகை" (குறு.127:2)** என்றும், மணம் கமழும் முகையினைக் **"கமழ்முகை" (கலி.72:7)** என்றும், செழித்த மொட்டுக்களை **"கொழுமுகை" (அகம்.176:5)** என்றும், இருமலர்கள் தம்மிற் சேர்ந்து ஒப்பொத்த முகைகளை **"ஒத்தமுகை" (கலி.77:1)** என்றும் கூறினர்.
15. நறவம் பூவின் மொட்டினை **"முகை" (கலி.105:42)** என்றும், அதன் மணம் பொருந்திய மொட்டினை **"கமழ்முகை" (பரி.8:14)** என்றும் கூறினர்.
16. நெய்தலின் கமழும் முகையினை **"கமழ்முகை" (பரி.8:74)** என்றனர்.
17. நொச்சியும், முல்லையும் அரும்பவிழ்வதை **"ஊழ்முகை" (நற்.115:6)** என்று கூறினர்.
18. பாதிரியின் முதிர்ந்த அரும்பினை **"ஊழ்முகை" (புறம்.399:7)** என்றனர்.
19. பிச்சியின் கொழுவிய அரும்பினைக் **"கொழுமுகை" (குறு.168:1 குறு.222:5)** என்று கூறினர்.
20. மணம் தங்கிய பித்திகத்தின் அரும்பினை **"மணமுகை" (அகம்.42:2)** என்றனர்.
21. பிடாவின் மொட்டுக்களை **"பிடவுமுகை" (ஐங்.461:1)** என்றும், அதன் தொக்க அரும்புகளை **"தொகுமுகை" (அகம்.344:3)** என்றும் கூறினர்.
22. முருக்கின் சிவந்த அரும்புகளைச் **"செம்முகை" (அகம்.99:2 அகம்.229:16)** என்றும், குவிந்த அரும்புகளைக் **"குவிமுகை" அகம்.317:4** என்றும் கூறினர்.
23. முல்லையின் அரும்புகளை **"முகை" (குறு.188:1 குறு.193:6 பரி.8:76 கலி.103:6 கலி.108:15 கலி.118:20 புறம்.117:9)** என்றும், அதன் தோற்றிய அரும்புகளை **"எதிர்முகை" (குறு.62:1)** என்றும், தொக்க முகைகளைத் **"தொகுமுகை" (குறு.126:4)** என்றும், வெள்ளிய அரும்புகளை **"வெண்முகை" (குறு.162:4)** என்றும், சிறிய அரும்புகளைக் **"குறுமுகை" (குறு.220:5)** என்றும், பசிய அரும்பினைப் **"பசுமுகை" (குறு.323:5)** என்றும், மெல்லிய அரும்புகளை **"மென்முகை" (குறு.358:7)** என்றும், தன்னிலொத்த முகையினை **"நேர்முகை" (கலி.22:9)** என்றும், நிரைத்த அரும்புகளை **"நிரைமுகை" (அகம்.191:13)** என்றும், அதன் வாயினை **"முகைவாய்" (அகம்.244:4)** என்றும், **"முகைத்தலை" (குறு.382:2)** என்றும் கூறினர்.
24. தளவின் செவ்விய அரும்புகளைச் **"செம்முகை" (ஐங்.447:2)** என்றனர்.
25. மௌவலின் அரும்புகளை **"முகை" (கலி.14:3 கலி.27:4)** என்றும், அதன் வெள்ளிய அரும்புகளை **"வான்முகை" (அகம்.21:1 அகம்.144:4)** என்றும் கூறினர்.
26. அரும்பு முதிர்ந்த வெட்சிப் பூக்களை **"முகைமுதிர் வெட்சி" (அகம்.133:14)** என்றனர்.

**4. முகிழ்**

1. 'முகிழ்' என்பது மொட்டினைக் குறிக்கும் எனச் சேந்தன் திவாகரமும்11, முகிழ் என்பது சிற்றரும்பின் பெயராக வரும் எனப் பிங்கல நிகண்டும்12 கூறுகின்றன.
2. பனையின் குவிந்த அரும்பினை ''குவிமுகிழ்'' (பதிற்.70:6-7) என்றனர்.
3. பச்சிலையின் இளைய கொழுந்தினை ''இளமுகிழ்'' (பரி.19:750 என்றனர்.
4. இருப்பையின் குவிந்த அரும்பினை ''குவிமுகிழ்'' (அகம்.267:6) என்றனர்.
5. எருக்கின் குவிந்த அரும்பினை ''குவிமுகிழ்'' (குறு.17:2) என்று கூறினர்.
6. கோங்கின் மொக்குளை "முகிழ்'' கலி.56:24 என்றும், அதன் குவிந்த அரும்பினைக் ''குவிமுகிழ்'' (முருகு:35) என்றும் கூறினர்.
7. தாமரையின் மொட்டினை ''முகிழ்'' (சிறுபாண்:183) என்றனர்.
8. நெய்தலின் பொதிந்த அரும்புகளைப் ''பொதிமுகிழ்'' (அகம்.160:13) என்று கூறினர்.

9. முசுண்டையின் சுரிந்த அரும்பினைச் ''சுரிமுகிழ்'' (அகம்.235:9 ம.காஞ்சி:281) என்றார் மாங்குடி மருதனார்.
10. முல்லையின் அரும்புகள் ''முகிழ்'' (பரி.15:39) என்றும் கூறப்பட்டது.

## 5. பிணி

1. ''பிணி'' என்பது அரும்பின் முதிர் நிலையாகும்.
2. வண்டுகள் மோதுதலால் அரும்பு அவிழ்ந்த ஆம்பலை ''வண்டுபிணி'' (ஐங்.40:5) என்றும், அதன் மெல்லிய இதழ்களை ''மென்பிணி'' (புறம்.209:3) என்றும் கூறினர்.
3. அரும்பவிழந்த செயலையைப் ''பிணிநெகிழ் பிண்டி'' (பரி.திரட்டு.1:8) என்றனர்.
4. ஆலமரத்தின் பிணிப்புற்ற விழுதுகளைப் ''பிணிவீழ்'' (அகம்.319:2) என்றனர்.
5. குவளையின் போதாகிய அரும்பினைப் ''போதுபிணி'' (அகம்.125:6) என்று கூறினர்.
6. கூதளத்தின் வளம் பொருந்திய முகையினை ''வண்பிணி'' (அகம்.178:9) என்று கூறினர்.
7. கோங்கின் அலர்ந்த முகைகளை ''முகைபிணி'' (அகம்.99:5) என்று கூறினர்.
8. பிடாவின் அரும்புகள் ஒருங்கே விரிவதை ''ஒருங்குபிணி'' (அகம்.23:4) என்றனர்.
9. தாமரையின் முருக்கு அவிழ்ந்த அரும்புகளைத் ''தளைநெகிழ் பிணி'' (கலி.59:1) என்று கூறினர்.
10. நெய்தலின் வளவிய முறுக்கினை ''வண்பிணி'' (பதிற்.51:17) என்றனர்.
11. பகன்றையின் பிணிப்பு விரியாத அரும்புகளை ''தளைபிணி'' (அகம்.24:3) என்றனர்.
12. முருக்கின் செறிந்த அரும்புகளைத் ''ததர்பிணி'' (சிறுபாண்:254) என்றும், அவ்வரும்புகள் அவிழ்கின்ற முருக்கினைப் ''பிணிவிடு முருக்கு'' (கலி.33:4) என்றும் கூறினர்.
13. முல்லையின் மெல்லிய பொதிதலை உடைய சிறிய அரும்புகளை ''மென்பிணி'' (குறு.220:4-5) என்று கூறினர்.
14. செம்முல்லையின் அரும்பினை ''தளவுப் பிணி'' (அகம்.64:4) என்றனர்.
15. வேங்கையின் அரும்பு நெகிழ்ந்த பூக்களை ''பிணிநெகிழ் அலர்'' (கலி.32:5) என்று கூறினர்.

## 6. நகை

அகக்காழ் தாவரங்களில் நகை என்பது மொட்டின் பெயராக வரும் என சேந்தன் திவாகரமும், பிங்கல நிகண்டும் கூறுகின்றன.13 நகை என்பது அடைமொழியாகவும் வரும்.14

மலர்ந்த ஒளி பொருந்திய முல்லையை **''நகைவாய் முல்லை'' (அகம்.244:4)** என்றனர். நனை, அரும்பு, முகை, முகிழ், பிணி, நகை முதலிய மொட்டுக்கள் சங்க இலக்கியத்தை அலங்கரித்துள்ளன.

## முடிவுகள்

1. நனையும், அரும்பும், பிணியும் சங்க இலக்கியத்தில் அகக்காழ் தாவரங்களுக்கு மட்டுமே வந்தது.
2. மொட்டின் வகையான முகிழ் என்பது சங்க இலக்கியப் புறக்காழ் தாவரத்துள் பனைக்கு மட்டுமே வந்துள்ளது.
3. பிணி என்பது அரும்பின் முதிர் நிலையினைக் குறிக்கும்.
4. நகை என்பது மொட்டின் கடை நிலையும், மலரின் தொடக்க நிலையும் கொண்ட பருவமாகும்.
5. நகை என்பது சங்க இலக்கியத் தாவரங்களுள் முல்லைப் பூவிற்கு மட்டுமே வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**அடிக்குறிப்புகள்**

1. முல்.மண - பக்:14
2. சே.தி.மர.9 ˙ பி.நி.மர.158
3. சூ.நி.மர.48:1
4. இ.ஒ.பூ-பக்:56
5. பி.நி.மர.158
6. இ.ஒ.பூ-பக்:57
7. சே.தி.மர.9 ˙ பி.நி.மர.158
8. சூ.நி.மர.48:1
9. பி.நி.மர.172
10. இ.ஒ.பூ-பக்:57
11. சே.தி.மர.9
12. பி.நி.மர.172
13. சே.தி.மர.9 ˙ பி.நி.மர.158
14. சே.தி.மர.9.